අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref.: ED/02/29/02/02/36
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.:
දිනය / திகதி / Date: 2026.05.04

**சுற்றுநிருபம் இலக்கம் 2006/44 (i)**

மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளர்கள்,

அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்,

அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்,

அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,

அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

**கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நிதி ரீதியிலான ஊக்குவிப்பு வழங்குதல்.**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2006.11.27 திகதியிட்ட 2006/44 இலக்கச் சுற்றுநிருபத்தை பின்வருமாறு திருத்தம் செய்கின்றேன்.

02. 2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஆசிரியர்களுக்கான கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு மற்றும் அதிபர் கொடுப்பனவை அதிகரிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளுக்கு அமைய, கொடுப்பனவுகளைத் திருத்தம் செய்வது தொடர்பாக முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் வழங்கப்பட்டுள்ள இணக்கப்பாட்டிற்கு அமைய, தற்போது கஷ்டப் பிரதேசம் மற்றும் அதி கஷ்டப் பிரதேசம் என அடையாளம் காணப்பட்டுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான விசேட மாதாந்தக் கொடுப்பனவைத் திருத்தம் செய்வதற்குத் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி கிடைத்துள்ளது.

03. அதற்கமைய, கல்விச் சுற்றுநிருபம் 01/2024(I) மற்றும் அது தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கு உட்பட்டு, அதி-கஷ்ட மற்றும் கஷ்டப் பிரதேசங்கள் எனப் பெயரிடப்பட்டுள்ள அனைத்து தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் பின்வரும் உத்தியோகத்தர்களுக்கு 2026 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இக்கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அ. அதி-கஷ்டப் பிரதேச சேவையில் ஈடுபட்டுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு - மாதமொன்றிற்கு ரூ. 4000/-

ஆ. கஷ்டப் பிரதேச சேவையில் ஈடுபட்டுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு - மாதமொன்றிற்கு ரூ. 3000/-

நாலக களுவெவ
செயலாளர்